பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 06 சனிக்கிழமை 22.08.2020 கதிர் 156

## ஓகஸ்ட் 30ஆம் திகதி இ.தொ.காவுக்கு புதிய தலைவர்?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை எப்போது கூடுமென பலரும் வழிமீது விழிவைத்து காத்திருக்கின்றனர்.

இ.தொ.காவின் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவின் பின்னர், அவ்வமைப்பின் தொழிற்சங்க பிரிவு மற்றும் அரசியல் கிளைகளுக்கான தலைமைப்பதவி இன்னும் வெற்றிடமாகவே காணப்படுகின்றது.

2

## பள்ளத்தில் வீழ்ந்தது வான்; இருவர் பலி; மூவர் படுகாயம்



எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்ல - வெல்லவாய வீதியில் இராவணா எல்ல பிரதேசத்தில் வான் ஒன்று வீதியை விட்டு விலகிச் சென்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த வானில், அதன் சாரதி உட்பட 6 ஆண்கள் பயணித்துள்ளனர். இதில் 5 பேர் படுகாயமடைந்து சிறிகல, பதுளை, வெல்லவாய, தெமோதறை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். இந்த நிலையில், தெமோதறை வைத்தியசாலையில்

2

# சஜித் – மைத்திரி இரகசியப் பேச்சு

## அணி சேரும் சாத்தியம்



**கொழும்பு, ஓகஸ்ட் 22**

**ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே தொலைபேசிக் கலந்துரையாடல் இடம்பெற்றிருப்பதாக தகவல்கள் வெளியாகிவருகின்றன.**

**இந்த தொலைபேசி கலந்துரையாடலில் தங்களுடன் இணைந்து செயற்படும்படி மைத்திரிக்கு சஜித் அழைப்பு விடுத்திருப்பதாகவும் ஒரு சில சிங்கள இணையத்தளங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.**

2

## எதிரணியில் இருந்து மூவர் அரசின் பக்கம் பாயத் தயார்?

சிறிய கட்சிகளை சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலில் அரசாங்கத்தில் இணைந்து கொள்வது தொடர்பான பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

இவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் சிரேஷ்ட உறுப்பினர்கள் எனவும் கூறப்படுகிறது.

புதிய அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிக்க இவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் தனக்கு ராஜாங்க அமைச்சர் பதவியை வழங்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுள்ளமையுடன், ஏனைய இருவர் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணத்திற்கான அபிவிருத்திக்கு உதவுமாறு கோரியுள்ளனர்.

அரசாங்கத்திற்கு தற்போது நாடாளுமன்றத்தில் 150 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது. இவர்களின் சபாநாயகரை நீக்கினால், 149 பேரின் ஆதரவு உள்ளது.

2

## சு.கவின் மாநாடு செப். 2ஆம் திகதி; உப தலைவராகின்றார் அங்கஜன்!

### மைத்திரியின் மகளுக்கு முக்கிய பதவி

கொழும்பு, ஓக 22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதன்போது முக்கிய சில பதவிகளில் மாற்றம் வரக்கூடும் என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து மைத்திரிபால சிறிசேன விலகுவார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இளைஞர் ஒருவருக்கு வாய்ப்பளித்து கட்சியை அடுத்தகட்டம் நோக்கி கொண்டு செல்வதற்காகவே அவர் இம்முடிவை எடுப்பார் என சிங்கள இணையத்தளமொன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

எனினும், இது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. உப பிரதமர் பதவி கிடைக்கும் பட்சத்தில் மாத்திரமே அவர் தலைமைப்பதவியை விட்டுக் கொடுப்பார் எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் இளைஞர் அணித் தலைவராக செயற்படும் சாந்த பண்டாரவும் பதவி விலகவுள்ளார்.

பொதுத்தேர்தலில் சு.கவின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் வெற்றிபெற்ற அங்கஜன் இராமநாதனுக்கு உப தலைவர் பதவி வழங்கப்படவுள்ளது. அதேபோல மைத்திரிபால சிறிசேனவின் மகளும் மத்திய செயற்குழுவுக்குள் உள்வாங்கப்படுவார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் வடமத்திய மாகாணத்தில் அவர் போட்டியிடவுள்ளார்.

## விக்கியின் பேச்சுக்கள் தமிழருக்கு எதனைப் பெற்றுத் தரப்போகின்றன?

### பாதகங்கள்தான் கூடும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்!

நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் நாடாளுமன்றப் பேச்சுக்கள் தமிழ் மக்களுக்கு எந்த விதமான நன்மைகளையும் பெற்றுத் தரப்போவதில்லை என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்கள் தன்மீது வைத்துள்ள நம்பிக்கையும் எதிர்பார்ப்புக்களும் நிச்சயம் நிறைவேறும் என்று தெரிவித்துள்ளார்.

யாழ்பிராந்தியகூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தில் இன்று ஏற்பாடு செய்யப்பட்ட கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்



கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் -

நடைபெற்று முடிந்த

2

## துப்பாக்கிச்சூட்டில் குடும்பஸ்தர் சாவு!

அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு - காலி பிரதான வீதியில், பெரட் சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

2

## 5 வயதுக்கும் குறைவான 46 சிறுவர்கள் சிறைகளில்!

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் 5 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் 46 பேர் வரை இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை ஆணையாளர் திணைக்களத்தை மேற்கோள் காட்டி இவ்விவரம் வெளியாகியுள்ளன.

போதைப்பொருள் குற்றச்சாட்டு எனப் பல்வேறு வழக்குகளில் சிறை வைக்கப்பட்டு

2

## அமைப்பாளர், பேச்சாளர் பதவிகளில் தொடர்வேன்

### மணிவண்ணன் விடாப்பிடி



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக 22

எனக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் ஜனநாயகத்திற்கு எதிரானது; இயற்கை நீதிக்கோட்பாட்டுக்கு எதிரானது என்பதனால் நான் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளில் நீடிப்பேன் என்று சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டேன் என ஊடகங்களில் செய்தி வெளியாகி இரு தினங்களில் எனக்கு கட்சித் தலைவர் மற்றும் செயலாளரினால் நான் பதவி

2

## அதிகாலை கோர விபத்து; 5 ஆண்கள் பரிதாபச் சாவு!



குருநாகல், அலவ்வ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலக்கும்புர பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 05 பேர் உயிரிழந்துள்ளனர்.

இன்று அதிகாலை 4.05 மணியவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

2

## குரங்குகள் அதிகரிப்பு; மைத்திரிபால கவலை!

இலங்கையில் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாட்டின் விவசாயிகள் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குரங்குகள் தென்னை மரங்களையும் நாசப்படுத்துகின்றன.

2

## எதிரணியில் இருந்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த நிலையில் மேற்கூறிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலிலும், ஏனைய சிலர் அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு முன்னரும் அரசாங்கத்துடன் இணைய திட்டமிட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இ.தொ.காவுக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர் தேசிய சபை கூடியே ஜனநாயக முறைப்படி புதிய தலைவரை தெரிவுசெய்யும் எனதேர்தலுக்குமுன்னர்அறிவிக்கப்பட்டிருந்தது. ஜீவன் தொண்டமானுக்கு பொதுச்செயலாளர் பதவி கையளிக்கப்படும்போதும் அதே அறிவிப்புதான் விடுக்கப்பட்டது.

தற்போது தேர்தல் முடிவடைந்துவிட்டது. விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இ.தொ.காவின் தேசிய சபை எப்போது கூடுமெனப் பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஒகஸ்ட் 30 ஆம் திகதியே அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் ஜனன தினமாகும். அன்றைய தினம் தேசிய சபை கூடி புதிய தலைவரைத் தெரிவுசெய்யலாம் என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

எனினும், காங்கிரஸ் தரப்பிலிருந்து இது பற்றி இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

## அதிகாலை கோர ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குருநாகல் - கொழும்பு வீதியால், குருநாகலுக்குப் பயணித்த காரும், எதிர்த்திசையில் பயணித்த டிப்பர் வாகனமும் நேருக்குநேர் மோதி இவ்விபத்துச் சம்பவித்துள்ளது.

இவ்விபத்தில் கார் சாரதி உட்பட அதில் பயணித்த 5 ஆண்கள் படுகாயமடைந்த நிலையில் அலவ்வ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர்கள் அனைவரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில், டிப்பர் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அலவ்வ பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## துப்பாக்கிச்சூட்டில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சம்பவம் இன்று காலை 8.55 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த நபர் மீது, இனந் தெரியாத ஒருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த நபர், பலப்பிட்டிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின் னர் உயிரிழந்துள்ளார்.

அம்பலாங்கொடை பிரதேசத் தைச் சேர்ந்த 48 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

இத்துப்பாக்கிச் சூட்டை நடத்திய சந்தேகநபரை அடையாளம்காண்பதற்காக, அம்பலாங்கொடை தலைமையகப் பொலிஸ் விசாரணைப் பிரிவினரால் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 5 வயதுக்கும் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிறைச்சாலைக்குள்ளேயே பல கர்ப்பிணிப் பெண்களுக்குக் குழந்தைகள் பிறந்துள்ளன.

இவ்வாறு பிறந்த 46 குழந்தைகள் அவர்களுடைய தாய்மாருடன் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள சிறைகளில் இருக்கின்றனர் என்று கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

இந்தச் சிறுவர்கள் பற்றிய விவரங்கள் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைப்பாளர்,பேச்சாளர் .................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விலக்கப்பட்டுள்ளேன் எனக் கடிதம் மூலம் அறிவித்திருந்தனர்

சட்ட நிபுணர்கள், கல்வியாளர்கள், ஆதரவாளர்களுடன் கலந்தாலோசித்து அதற்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளேன்.

நான் பல்கலைக்கழகத்தில் சட்டபீடத்தில் கற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் போர் மௌனிக்கப்பட்ட பின்னர் எமது இனத்தின் கொள்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருடன் கைகோர்த்து பயணித்தேன்.

2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியடைந்தோம். அதனை அடுத்து பலர் எமது அமைப்பில் இருந்து விலகிச் சென்றனர். இருவர் துரதிஷ்டவசமாகக் காலமாகினர். அதன் பின்னர் தலைவர், செயலாளர், நான் ஆகிய மூவருமேஎமது அமைப்பைத் தொடர்ந்து முன்னெடுத்தோம். பல்வேறு அச்சுறுத்தல்கள் , நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து எமது அமைப்பைக் கட்டியெழுப்பினோம்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் நாம் மகத்தான வெற்றியைப் பெற்றோம். அதன் பின்னர் எமது அமைப்பு உத்வேகத்துடன் முன்னோக்கிச் சென்றது.

இந்த நிலையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் நான் இந்தத் தேர்தலில் தோல்வியுற்றால் , தேர்தல் அரசியலில் இருந்து விலகுவேன் என அறிவித்திருந்தேன். இதனை எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அரசியலில் இருந்து வெளியேறுவதைப் பலரும் விரும்பாததல், நான் தொடர்ந்து அரசியலில் பயணிப்பேன்.

எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் என் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை நிராகரித்துள்ளேன். எனக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் இயற்கை நீதி கோட்பாட்டுக்கு எதிரானது.

மத்திய குழு கூட்டம் ஏன்,எதற்கு எனக் கூறப்படாமல் கூட்டப்பட்டது. எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. என் தரப்பு நியாயங்களை கூற சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இது ஜனநாயகம் இல்லாதது. அறமற்ற செயற்பாடாகும்.

அதில் பிராதான குற்றசாட்டு பணம் வாங்கியதாக உள்ளது. நான் எனது சொந்தத் தேவைக்காக பணம் பெறவில்லை. அதனை முற்றாக மறுக்கிறேன். ஏனைய விடயங்கள் தொடர்பில் பொது வெளியில் வெளியிட விரும்பவில்லை. அது தொடர்பில் எனது பதில் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன்.

எனக்கு எதிராகக் கட்சியினால் எடுக்கப்பட்ட ஜனநாயகப் பண்பற்ற ஒரு தீர்மானம் என்பதாலும், இயற்கைநீதிகோட்பாட்டிற்கும் எதிரானது என்பதனால் , நான் தொடர்ந்து தேசிய அமைப்பாளராகவும், ஊடகப்பேச்சாளராகவும் செயற்படுவேன். எம் இனத்திற்காக உயிர் நீத்தவர்களை மனதில் நிறுத்தி அர்ப்பணிப்புடன் எனது செயற்பாடுகள் தொடரும் என ஆணித்தரமாக கூறுகிறேன்.

இன்று தேசியம் பேசுபவர்கள் பிளவுபட்டு நிற்பதால் சிங்களக் கட்சிகள், தேசியம் பேசாதவர்கள் வெற்றி பெறுகின்றார்கள். அதனால் சிறு சிறு பிரச்சினைகளுக்காகப் பிரிந்து செல்வதை நான் என்றைக்கும் ஏற்கமாட்டேன்.

தேர்தல் காலத்தில் எனக்கு எதிராகக் கட்சியைச் சேர்ந்த சிலரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் கட்சியின்தலைவர் கஜேந்திரகுமார்பொன்னம்பலத்தைக் கடந்த 09ஆம் திகதி எனது நண்பன் சட்டத்தரணி அருச்சுனாவுடன் சென்று சந்தித்து முறையிட்டு சிலஆதாரங்களையும்முன்வைத்தோம். அது தொடர்பில் எனக்கு இதுவரை தலைவர் எந்தப் பதிலையும் தரவில்லை.

எனக்கும் தலைவருக்கும் இடையிலான உறவு ஆழமானது. நாம் என்றும் இணைந்து செயற்படுவோம். நான் எனது கட்சியுடன் நேசக்கரத்தை நீட்டுவேன். எனது கட்சி நிறுவனமயப்படுத்தப்பட்டு மக்கள் சேவைக்காக செயற்படும். அதற்காக தொடர்ந்து செயற்படுவேன் என உறுதி அளிக்கிறேன். காலங்கள் பல பதில்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் என நம்புகிறேன் - என்றார்.

## விக்கியின் பேச்சுக்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேர்தலில் வீணைக்கு வாக்களித்த மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கும் அதேபோன்று இவ்வாறான கௌரவிப்புநிகழ்வுகளைஏற்பாடுசெய்கின்றவர்கள் கொண்டிருக்கின்ற எதிர்பார்ப்புக்களும் வீண் போகாத வகையில் தன்னுடைய வேலைத் திட்டங்கள் அமையும் என்றார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வீ. விக்னேஸ்வரன் தன்னுடைய நாடாளுமன்றக் கன்னி உரையில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் குறிப்பிட்ட அமைச்சர், அவ்வாறான கருத்துக்கள் சில தமிழ் ஊடகங்களாலும் சமூக ஊடகங்களினாலும் பெரிதாக சிலாகிக்கப்பட்டாலும் எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளுக்கோ அல்லது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கோ எந்தவிதமான தீர்வினையும் அவை பெற்றுத் தராது எனவும் பாதகங்களையே அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பலமான மத்திய அரசாங்கம் அமைந்துள்ள நிலையில், குறித்த அரசாங்கத்துடன் தனக்கு இருக்கும் தேசிய நல்லிணக்கத்தினைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை தீர்க்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## குரங்குகள் அதிகரிப்பு; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாம் விவசாயத்துறை அமைச்சராக இருந்தபோது நாட்டில் 10 லட்சம் குரங்குகள் இருந்தன. எனினும் தற்போது 20 லட்சம் குரங்குகள் நாட்டில் இருக்கின்றன என இவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பள்ளத்தில் வீழ்ந்தது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேர்க்கப்பட்ட இருவரே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சஜித் – மைத்திரி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருப்பினும் இதுபற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தருடன் வினவியபோது, இவ்விருவருக்கும் இடையே எந்தவொரு கலந்துரையாடலும் இடம்பெறவில்லை என்று அவர் கூறினார். சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எதிர்கட்சியுடன் இணைவதற்கான எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் முன்னாள் ஜனாதிபதியும் ஆட்சித் தரப்பின் பங்காளிக் கட்சியின் தலைவருமான தமக்குப் புதிய அரசில் அமைச்சர் பதவி ஏதும் அளிக்கப்படாமல் ஒதுக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பில் மைத்திரிபால சிறிசேன பெரும் விசனத்தில் இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பேச்சாளர் பதவி என்பது 'சங்கீதக் கதிரை' விடயமா?

பௌத்த, சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பை இலங்கைத் தீவு எங்கும் நிலைநிறுத்தும் தீவிரப் போக்குடைய ராஜபக்ஷக்கள் தரப்பு நிறைவேற்று அதிகாரத்துடன் நாடாளுமன்ற அதிகாரத்தையும் வலிமையுடன் கைப்பற்றியிருக்கின்றது.

1977 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்குக் கிடைத்த பெரு வெற்றிக்குப் பின்னர் அதே போன்ற வலிமையுடன் ராஜபக்ஷக்கள் தெற்கில் எழுச்சி பெற்றிருக்கின்றனர்.

ஆனால் தமிழர் தேசத்தைப் பொறுத்தவரை 1977 இற்கும் 2020 இற்கும் நிறைய வேறுபாடு உண்டு.

1977 இல் தெற்கில் பேரினவாதியான ஜே.ஆர். அதிகார எழுச்சி கொண்ட அதே சமயத்தில் தமிழர் தேசத்திலும் தமிழ்த் தேசிய சிந்தனை எழுச்சி கொள்ளத் தொடங்கியிருந்தது.

கருத்தியல் ரீதியில் மட்டுமல்லாமல், போரியல் ரீதியில் கூட சிங்கள அரசுக்கு சவால் விடக் கூடிய நிலையை நோக்கி நகரும் ஆரோக்கிய வலிமையில் தமிழர் தேசம் இருந்தது.

ஆனால் , இன்று நிலைமை அத்தகையது அல்ல.

கருத்தியல் ரீதியாகவே தமிழர் தாயகத்தில் தமிழர் தேசியம் தள்ளாடுகின்றது. அதை நிலை நிறுத்த வேண்டிய சக்திகளும் வலிமை குன்றித் தள்ளாடுகின்றன.

இந்தச் சூழலில் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டு, யுத்தக் குற்றங்களை முன்னெடுத்து, மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை இழைத்து, தமிழர் தேசிய எழுச்சியை குரூரமான போரியல் அட்டூழியங்கள் மூலம் ஒடுக்கி, நசுக்கிய தென்னிலங்கைச் சிங்களம் அந்தக் குற்றங்களுக்கும், கொடூரங்களுக்கும், தவறுகளுக்கும் பொறுப்புக் கூறுவதினின்றும் தன்னை விடுவித்து, மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதைத் தவிர்த்து, இழப்பீடுகளை வழங்காமல் கைவிடுவதற்காகப் பெரும் சக்தியாய் இன்று எழுந்து நிற்கின்றது.

இந்த அவல – இக்கட்டு – நிலையிலிருந்து தமிழினத்தை மீட்டு, அடுத்த கட்டத்துக்கு அவர்களது உரிமைப் போராட்டத்தை நகர்த்துவது தமிழினத்தின் தலைவர்கள் மீது இன்று விழுந்திருக்கின்றது.

தென்னிலங்கை பௌத்த, சிங்களம் ஜனநாயகக் கோட்பாட்டுச் சிந்தனையின் அடிப்படையில் – தேர்தல் நடவடிக்கை மூலம்– ஒன்றுபட்டு, ஒரு சக்தியாய் விஸ்வரூபம் பெற்று எழுந்து நிற்கின்றது.

மறுபுறத்தில் கருத்தியல் ரீதியாகவும், கொள்கைக் கோட்பாட்டுச் சிந்தனையிலும் பிளவுண்டுள்ள தமிழினம் அதனால் ஜனநாயகத் தேர்தலில் சிதறுண்டு கிடக்கின்றது.

அதன் காரணமாக, நாடாளுமன்ற ஆசனங்கள் என்ற ஜனநாயகக் கேலிக் கூத்தின் அட்சரகணித எண்ணிக்கையின் அடிப்படையில் சிங்களத் தரப்புக்கு கிஞ்சித்தேனும் சவால் விடக் கூடிய நிலையில் தமிழர் தரப்பு இல்லை.

இதனால்தான் புதிய தேர்தலின் பின்னர் வரப்போகின்ற நாடாளுமன்றத்தில் தமிழர் தரப்பின் ஆசன எண்ணிக்கை தாக்கம் செலுத்தாது, ஆனால் உறுப்பினர்களின் ஆளுமை விடயம் தாக்கம் செலுத்தும் என்று இன்று காலை நாளிதழுக்குரிய இப்பத்தி வரை விடாது தொடர்ந்து வலியுறுத்திச் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றோம்.

ஆனால், கூட்டமைப்பின் மூத்த தலைவர் இரா.சம்பந்தனுக்கும், ஏனைய கூட்டமைப்புத் தலைவர்களுக்கும் இந்த எண்ணிக்கை, ஆளுமை தொடர்பான விடயங்களின் அடிப்படை கூடப் புரியவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அவர்களுடைய அரசியல் நகர்த்தல்கள், நடவடிக்கைகள், அத்தகைய எண்ணப் போக்கையே எமக்குத் தந்து நிற்கின்றன.

தனக்குக் கிடைத்த அளவுக்கதிக பெரும்பான்மையை வைத்துக் கொண்டு நாட்டின் அரசமைப்பு வரை தென்னிலங்கை ஆட்சிப் பீடம் தலைகீழாக மாற்றப் போகின்றது.

இக்கட்டத்தில் தமிழர் தரப்பு வேகமாகவும், தீவிரமாகவும், மட்டுமல்லாமல் தந்திரோபாயமாகவும், மதிநுட்பத்துடனும், உயர் தரத்திலும், ஆளுமையுடனும் இயங்குவது முக்கியம்.

தனி ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை அனுப்பி இருக்கும் நீதியரசர் விக்னேஸ்வரனின் தரப்பும் –

இரண்டே இரண்டு பேரை மட்டும் நாடாளுமன்றுக்கு அனுப்பும் வாய்ப்பைப் பெற்ற தமிழத் தேசிய மக்கள் முன்னணியும் –

அந்த ஆளுமைத் தரப்பை வெளிப்படுத்தத் தொடங்கி விட்டன.

மறுபுறத்தில் இதுவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்து, சட்ட மற்றும் சர்வதேச விவகாரங்களைக் கையாண்டு வந்த சுமந்திரனைக் கீழிறக்கி, ஆங்கில மொழி கைவரப் பெறாத செல்வம் அடைக்கலநாதனை கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுப் பேச்சாளராக நியமிக்கும் கேலிக் கூத்துத் திட்டத்துக்கான பூர்வாங்க நடவடிக்கையை தேர்தலில் தோற்றுப் போன மாவை சேனாதிராசாவுடனும் மற்றும் சித்தார்த்தனுடனும் சேர்ந்து சம்பந்தன் ஆரம்பித்திருக்கிறார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

திருவாளர் சம்பந்தன் அவர்களுக்கு ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். சிங்களப் பேரினவாத பூதத்தின் விஸ்வரூப எழுச்சியின் கபளீகரத்துக்குள் சிக்குப்படும் பேரவலத்தில் தமிழினம் நிற்கையில், அதை எதிர்கொள்ள வேண்டிய வரலாற்றுக் கட்டத்தில் தமிழினத்தைத் தலைமை தாங்கும் சரித்திரப் பொறுப்பு உங்கள் கைகளில் வீழ்ந்திருக்கின்றது. இன்றைய கட்டத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளர் பதவி என்பது 'சங்கீதக் கதிரை' விவகாரம் அல்ல மாறிமாறிக் குந்துவதற்கு. உங்கள் அரசியல் ஞானம் உங்களைச் சரியாக வழி நடத்தட்டும்.

# அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலை பட்டதாரிகளுக்கும் அரச நியமன ஏற்பாடு!

## மேற்கொள்கிறார் அமைச்சர் டக்ளஸ்





யாழ்ப்பாணம், ஓக.22

பல்கலைக் கழகங்கள் ஆணைக்குழுவால் அங்கீ கரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பை மேற்கொண்ட பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

அத்துடன், விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட மற்றும் ஒத்திவைக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் அனைவரையும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக மேன்முறையீட்டை மேற்கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தின்போது பாதிக்கப்பட்ட ஒரு பகுதியினர் இன்று (சனிக்கிழமை) அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவையாழ். அலுவலகத்தில் சந்தித்தனர். அதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். யாழ். மாவட்டத்தில் மேற்படி பட்டதாரிகள் நியமனத்திற்கு விண்ணப்பித்தர்களில் சுமார் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்களின் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன அல்லது ஒத்திவைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பதாரிகள் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர்கள் அல்லது ஏற்கனவே தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் என்பதற்கு ஆதாரமாக சேமலாப நிதி கணக்கை கொண்டிருப்பவர்கள் என்ற அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படாது தவிர்க்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது, பல்கலைக் கழகங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக் கழகங்களின் பட்டதாரிகளுக்கும், சேமலாப நிதிக் கணக்கை வைத்திருந்தாலும் பட்டப்படிப்பிற்கு பொருத்தமற்ற தொழில்களில் தற்காலிகமாக ஈடுபட்டு வருகின்றவர்களுக்கும் நியமனங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

அந்தவகையில், பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் மேன்முறையீட்டை மேற்கொள்ளுமாறும் மேலதிகமாக பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# எங்கள் மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் ஆசனத்தை ரத்துச் செய்யக் கோரிக்கை!

எங்கள் மக்கள் சக்தி பெற்றுக்கொண்டுள்ள தேசிய பட்டியல் நாடாளுமன்ற ஆசனத்தை உடனடியாக ரத்து செய்யுமாறு இலங்கை ராமண்ண மகா நிகயா தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல துறவிகள் இந்த பதவிக்காக போராடி வருகின்றமையால் புத்த சாசனத்தில் ஏற்பட்ட அவமதிப்பைக் கருத்தில் கொண்டு ராமண்ண மகா நிகயா சார்பாக வென். ஓமல்பே சோபித தேரர் இந்த கோரிக்கையை தேர்தல் ஆணையத்திடம் தெரிவித்துள்ளார் என்று கூறினார்.

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட எங்கள் மக்கள் சக்தி பெற்ற வாக்குகளின் சதவீதத்தின்படி, கட்சி ஒரு தேசிய பட்டியல் இடத்தை வென்றுள்ளது.

இருப்பினும், இந்த பதவிக்கு இதுவரை யாரும் நியமிக்கப்படவில்லை, இதனால் கட்சிக்குள் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சுகாதாரத் துறையுடன் பேசிய பின்னரே கல்வித்துறை தொடர்பான மாற்றங்கள்!

## கல்வி அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

பொதுக் கொள்கையின் அனைத்து துறைகளிலும் முடிவுகளை எடுக்க அரசாங்கம் நிபுணர்கள் அல்ல என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இன்று (சனிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அமைச்சர், சுகாதாரத் துறையைச் சேர்ந்த நிபுணர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே பாடசாலை மாணவர்கள் தொடர்பாக முடிவெடுக்க முடியும் எனவும் கூறினார்.

இதேவேளை பரீட்சைகளுக்கான திகதிகளை நிர்ணயிப்பது தொடர்பாகப் பேசிய கல்வி அமைச்சர், இது விரைவில் திட்டமிடப்படும் என்றும் உறுதியளித்தார்.

தற்காலத்திற்குப் பொருந்தும் வகையில் பாடசாலைப் பாடத்திட்டங்களை புதுப்பிப்பது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரமொன்று விரைவில் தயாரிக்கப்படுமென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் முன்னர் தெரிவித்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவிலிருந்து விடுதலையானோர் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிப்பு!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 798 ஆக அதிகரித்துள்ளது.

இன்று காலை 10 மணி வரையான கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 09 பேர் குணமடைந்தமையை அடுத்தே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில் தற்போது கொரோனா தொற்றுக்குள்ளான 2 ஆயிரத்து 941பேரில் 132 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை 65 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். நாட்டில் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீ விபத்தில் உயிரிழந்தோருக்கு ஜனாதிபதி, பிரதமர் இரங்கல்!



தெலுங்கானாவிலுள்ள நீர்மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தெலுங்கானா நீர் மின் நிலைய தீ விபத்தில் 9 பேர் உயிரிழந்தமை கவலை அளிக்கிறது. அவர்களது குடும்பத்துக்கு எனது ஆறுதல்கள் விபத்தில் காயமடைந்தோர் விரைந்து குணமடையப் பிரார்த்திக்கின்றேன் எனக் கூறியுள்ளார்.

அதேபோன்று பிரதமர் மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ஸ்ரீசைலம் நீர் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து துரதிஷ்டவசமானது. உயிரிழந்தோரின் குடும்பத்துக்கு ஆறுதல்கள். காயமடைந்தவர்கள் குணமடையப் பிரார்த்திக்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மத்திய அமைச்சர் அமித்ஜா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தெலுங்கானா நீர்மின் நிலைய தீ விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர் என்ற செய்திகேட்டு துயரமடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு இரங்கல்கள் எனக் கூறியுள்ளார்.

தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவ், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தில், மின்நிலையத்துக்குள் சிக்கிக்கொண்ட 9 பேரை மீட்க தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், அது பலனளிக்காமல் போய்விட்டது. அவர்களை இழந்து வாடும் அவர்களுடைய குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தெலுங்கானாவில் ஸ்ரீசைலத்தில் உள்ள நீர்மின் நிலைய ஆலைக்குள் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கியிருந்த ஒன்பது பேர் நேற்று உயிரிழந்தனர் என அதிகாரிகள் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இந்தியாவிலுள்ள சீனர்களுக்கு கடவுச்சீட்டு வழங்கக் கட்டுப்பாடு!

இந்தியாவிலுள்ள சீனர்களுக்கு கடவுச்சீட்டு வழங்க சில கட்டுப்பாடுகளை இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

அதாவது, சீனாவைச் சேர்ந்தவர்களுக்கு கடவுச்சீட்டு வழங்கும் முன்னர் அவர்கள் தொடர்பாகப் பாதுகாப்புச் சோதனைகளை நடத்த வேண்டும் எனவும் அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

அதாவது, இந்தியாவில் செயற்படும் சீன நிறுவனங்களில் பணியாற்றுவோர், சீனாவைச் சேர்ந்த தொழிற்துறை நிபுணர்கள், கல்வியியலாளர்கள் உள்ளிட்டோருக்கு இந்தக் கட்டுப்பாடு பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சீனா தொடர்பான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இந்திய – அமெரிக்க வர்த்தகப் பேச்சு விரைவில் நிறைவடையும் – தரன்ஜித்

இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையில் நடைபெற்றுவரும் வர்த்தகப் பேச்சு விரைவில் நிறைவடையுமென அந்நாட்டுக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சாந்து நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்திய தொழிலக வர்த்தக சம்மேளனங்களின் கூட்டமைப்பு தொடர்பாக நடைபெற்ற காணொலி வாயிலான கருத்தரங்கில் தரன்ஜித் சிங் சாந்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் காணொலி வாயிலான கருத்தரங்கில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான வர்த்தகம் வருடந்தோறும் 10 சதவீத அளவில் அதிகரித்து வருகிறது.

கடந்த 2019ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் 11.25 லட்சம் கோடி ரூபாய் அளவு அதிகரித்துள்ளது.

நடப்பு 2020 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மதிப்பு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25 சதவீதம் குறைந்துள்ளது.

மேலும் கொரோனா நோய்த்தொற்று பரவல் காரணமாக வர்த்தகத்தில் சிறிது தொய்வு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் மிகச் சிறந்த வர்த்தக கூட்டாளியாக அமெரிக்கா விளங்கி வருகிறது. எனினும், இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் இன்னும் முழு அளவை எட்டவில்லை.

அதனை அடைவதற்கு இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக ஒப்பந்தம்



கையெழுத்தாவது அவசியமாகும். அதைக் கருத்தில் கொண்டு வர்த்தகப் பேச்சு விரைவில் நிறைவடையும் என்று நம்புகின்றேன்.

அத்தகைய வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையேயான நல்லுறவை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், முதலீடுகளையும் அதிக அளவில் ஈர்க்கும். அதன் காரணமாக இரு நாடுகளிலும் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா வைரஸ் பாதிப்பு பட்டியலில் 2 ஆம் இடம் பிடிக்கவுள்ளது இந்தியா!

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 இலட்சத்தை நெருங்கும் நிலையில் இந்தியா தற்போது காணப்படுகின்றது.

இன்று (சனிக்கிழமை) காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில், கொரோனா வைரஸ் தொற்றால் புதிதாக அடையாளம் காணப்பட்டோர், குணமடைந்தோர், உயிரிழந்தோர் நிலைவரம் குறித்து மத்திய சுகாதார அமைச்சகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது –

புதிதாக 69 ஆயிரத்து 878 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனூடாக மொத்த பாதிப்பு எண்ணிக்கை 29லட்சத்து 75 ஆயிரத்து 701 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், குறித்த வைரஸ் தொற்றால் புதிதாக 945 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கமைய மொத்த உயிரிழந்தோர் எண்ணிக்கை 55 லட்சத்து 794 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 63 ஆயிரத்து 631 பேர் குணமடைந்துள்ளனர். இதனால் தொற்றில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 22 லட்சத்து 22 ஆயிரத்து 577 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 6 லட்சத்து 97 ஆயிரத்து 330 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கமைய கொரோனாவால் உயிரிழந்தோர் விகிதம் 1.89 விகிதமாகவும், குணமடைந்தோர் விகிதம் 74.30 விகிதமாகவும், சிகிச்சை பெறுவோர் 23.43 விகிதமாகவும் காணப்படுகின்றது என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சிகளைப் புறக்கணிக்கிறது அ.தி.மு.க. குற்றஞ்சாட்டுகிறார் தி.மு.க. தலைவர் ஸ்டாலின்!

அரசு விழாக்கள், ஆய்வுக்கூட்டங்களில் எதிர்க்கட்சி அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை அனுமதிக்காமல், அ.தி.மு.க. அரசு புறக்கணிப்பது கண்டனத்துக்குரியது தென தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க.வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மு.க.ஸ்டாலின் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

தர்மபுரியில் இடம்பெற்ற கொரோனா குறித்த ஆய்வு கூட்டத்தில், தி.மு.க.அமைச்சர் செந்தில் குமாரை அனுமதிக்கவில்லை. மேலும், தான் நடத்தும் ஆய்வு கூட்டங்களில் அமைச்சரை எப்படி அனுமதிக்க முடியும் என, முதல்வர் இ.பி.எஸ். கேள்வி எழுப்பியிருப்பது ஜனநாயக விரோதம், பண்பாடற்ற செயலாகும்.

வேலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களிலும் தி.மு.க அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டு உள்ளனர். அ.தி.மு.க பொதுக்குழுக் கூட்டம், கட்சி நடத்தும் பொதுக்கூட்டங்களில் பங்கேற்க அனுமதி கேட்கவில்லை.

கொரோனா நோய், மரணங்களைத் தடுப்பது தொடர்பான ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்கத் தான் அனுமதி வேண்டும் என தி.மு.க. அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கின்றனர்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அவமதிக்கும் போக்கை, முதல்வரும் அ.தி.மு.க அமைச்சர்களும் கைவிட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# எஸ்.பியின் உடல் நிலை சீராக உள்ளது

## என்கின்றனர் வைத்தியர்கள்



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிசிகிச்சை பெற்றுவரும் எஸ்.பி.பால சுப்ரமணியத்தின் உடல் நிலை சீராக உள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது.


தீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கை சுவாசக் கருவியின் உதவியுடன் அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எஸ்.பி.பி.யின் உடல்நிலையை மருத்துவவல்லுநர்குழுதொடர்ந்துகண்காணித்து வருவதாகவும், அவரது உடல்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து அவ்வப்போது அவரது குடும்பத்தினரிடம் தெரிவித்து வருவதாகவும் மருத்துவமனை நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

பிரபலசினிமாபின்னணிப்பாடகர்எஸ்.பி.பால சுப்ரமணியம் கடந்த ஐந்தாம் திகதி கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு சூளைமேடு பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன்பு அவரது உடல்நிலை மோசமடைந்ததால் அவர், அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய தேர்தல் ஆணையாளராக ராஜீவ் குமார் நியமனமானார்!



புதிய தேர்தல் ஆணையாளராக முன்னாள் நிதித்துறைச் செயலாளர் ராஜீவ் குமார் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளராக பதவி வகித்து வரும் அசோக் லாவசா எதிர் வரும் 31 ஆம் திகதி இராஜினாமா செய்யவுள்ளமையால் அப்பதவிக்கு ராஜீவ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

குடியரசுத்தலைவரின் ஒப்புதலுடன் இவ்விடயம் தொடர்பான அறிக்கையை மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ளது. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்து பின்னர் நிதித்துறைச் செயலாளராகவும் ராஜீவ் குமார் பணியாற்றியுள்ளார்.

மேலும், சிறிய நிறுவனங்களுக்கு 59 நிமிடங்களில் கடனுதவி வழங்கும் திட்டம் போன்றவற்றை மத்திய அரசுக்கு வடிவமைத்து கொடுத்ததில் ராஜீவ் குமார் பெரும் பங்காற்றியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மிகப்பெரிய அளவில் இயற்கை எரிவாயு சர்ச்சைக்குள்ளும் துருக்கியில் கண்டுபிடிப்பு!



துருக்கி கடற்பரப்பில் 32,000 கோடி கன மீட்டர் அளவிற்கு இயற்கை எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரெசெப்தயிப்எர்டோகன் அறிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய கடற்பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு தொடர்பாக கிரேக்கம் மற்றும் துருக்கி இடையே அதிகரித்து வரும் மோதல்களுக்கு மத்தியில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

துருக்கி தன் நாட்டை சுற்றியுள்ள கருங்கடல் மற்றும் மத்திய தரைக்கடல் பகுதியில் இயற்கை எரிவாயுவை கண்டெடுக்கும் பணியில் அண்மைக்காலமாக ஈடுபட்டு வந்த நிலையில், 32,000 கோடி கன மீற்றர் அளவிற்கு இயற்கை எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தயிப் எர்டோகன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

துருக்கியின் வரலாற்றில் கருங்கடலில் இருந்து மிகப்பெரிய அளவில் இயற்கை எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

32,000 கோடி கனமீட்டர் (11.3 டிரில்லியன் கன அடி) அளவில் இயற்கை எரிவாயு இருப்பதை துருக்கி கப்பல் கண்டுபிடித்துள்ளது. துருக்கி கடற்பரப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த இயற்கை எரிவாயு 2023 ஆம் ஆண்டு முதல் மக்களின் நுகர்வுக்கு வரும்.

ரோமேனியாவின் எல்லைப்பகுதியில் உள்ள கருங்கடலின் மேற்கு பகுதியில் துருக்கியின் ஃபடா கப்பல் கடலில் துளையிடும் பணியை மேற்கொண்டு வந்தது. அப்போது தான் இந்த இயற்கை எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டது எனக் கூறினார்.

கிரேக்க தீவான கஸ்டெல்லோரிசோவிற்கு துருக்கிய கடற்படைக் கப்பலான 'ஓருக் ரெய்ஸ்' என்ற ஆய்வுக் கப்பலை துருக்கி அனுப்பியபோது இருநாடுகளுக்கும் இடையே மோதல் அதிகரித்தது. தற்போது அங்கு அதிகரித்து வரும் மோதல்களுக்கு மத்தியில், கிழக்கு மத்தியதரைக் கடலில் பிரான்ஸ் தனது இராணுவ இருப்பை அதிகரித்துள்ளது.

## முடக்கம் இன்றிக் கொரோனாவை கட்டுப்படுத்த ஐரோப்பாவால் முடியும்

### உலக சுகாதார ஸ்தாபனம்

முடக்கநிலையை அமுல்படுத்தாமல் ஐரோப்பாவால் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொற்று பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.



இதுதொடர்பாக உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஐரோப்பநாடுகள் முடக்கநிலையை அமுல்படுத்தாமலும் கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்த முடியும்.

ஏனெனில் அதிகாரிகள் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கான போதிய திறனைக் கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸை கட்டுபடுத்திக் கொண்டே பொருளாதாரத்தை சிறப்பாக இயக்கலாம் என்று உலக சுகாதார அமைப்புக்கான ஐரோப்பா கிளையின் தலைவர் ஹன்ஸ் குல்ஜ் தெரிவித்துள்ளார். ஐரோப்பாவில் இதுவரை கிட்டத்தட்ட 33 லட்சத்துக்கும் அதிகமானோர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

## கொரோனா உயிரிழப்பு 8 லட்சத்தைத் தாண்டியது

கொரோனா வைரஸ் (கொவிட் – 19) பெருந் தொற்றால், உலகளவில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை எட்டு லட்சத்தைக் கடந்தது.



அண்மைய உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களின் படி, மொத்தமாக எட்டு லட்சத்து மூவாயிரத்து 200 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், இதுவரை மொத்தமாக கொடிய கொரோனா வைரஸ் தொற்றால், இரண்டு கோடியே 31 இலட்சத்து 17ஆயிரத்து 813 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மொத்தமாக, ஒரு கோடியே 57 லட்சத்து ஒன்பதாயிரத்து 677 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

கொவிட் – 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட நாடாக அமெரிக்கா விளங்குகின்றது. அதற்கு அடுத்தப்படியாக பிரேஸில் இந்தியா, ரஷ்யா மற்றும் தென்னாபிரிக்கா, ஆகிய நாடுகள் உள்ளன.

## உக்ரைனில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியது!

உக்ரேனில் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) பெருந்தொற்றால், பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்தது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, உக்ரேனில் ஒரு லட்சத்து 643 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இதுவரை மொத்தமாக, இரண்டாயிரத்து 207 பேர் கொவிட் – 19 தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும், வைரஸ் தொற்றால் இரண்டாயிரத்து 106 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை அங்குள்ள மருத்துவமனைகளில், 47ஆயிரத்து 358பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 177 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. மேலும், இதுவரை மொத்தமாக 51ஆயிரத்து 78 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

## ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் ஜேர்மனிக்கு சிகிச்சைக்காக!

ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸி நவல்னியை சிகிச்சைக்காக ஜேர்மனிக்கு கொண்டுச் செல்ல, ஜனாதிபதி விளாடிமீர் புடின் அனுமதி அளித்தமையைத் தொடர்ந்து, அவர் பெர்லிக்கு கொண்டுச் செல்லப்பட்டுள்ளார்.

ரஷ்யாவில் நவல்னியின் உயிருக்கு ஆபத்து இருப்பதால் மேலதிக சிகிச்சைக்காக அவரை ஜேர்மனிக்கு கொண்டு செல்வதாக நவல்னியின் குடும்பத்தினர் தரப்பில், ஜனாதிபதி புடினிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டதன் பிறகு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அலெக்ஸி நவல்னியை சிகிச்சைக்காக ஜேர்மனிக்கு கொண்டு செல்ல முடியாத அளவுக்கு உடல்நிலை மோசமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

ஆனால், தற்போது நவல்னியின் உடல்நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக அவரைத் தனி விமானம் மூலம் ஜேர்மனிக்குக் கொண்டு செல்ல மருத்துவமனை நிர்வாகமும் அனுமதி வழங்கியது.

44 வயதான அலெக்ஸி நவல்னி, நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை, சைபீரியாவில் உள்ள டாம்ஸ்க் நகரிலிருந்து தலைநகர் மாஸ்கோவுக்கு விமானத்தில் சென்ற போது, திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதனையடுத்து விமானம் ஓம்ஸ்கில் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டு அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் சூடான திரவத்தில் விம் கலந்து குடித்துள்ளார் எனக் கூறினார்கள். அவர் தற்போது கோமா நிலைக்கு சென்றுள்ளார். ஆகவே இதன் உண்மை தன்மையை அறிய முடியாதுள்ளது.

## ஹொங்கொங்கில் வசிப்பவர்களுக்கு சீன உதவியுடன் கொரோனா சோதனை!

ஹொங்கொங்கில் வசிக்கும் அனைவருக்கும் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) பரிசோதனை செய்ய, நகர அரசு தீர்மானித்துள்ளது.

இந்த திட்டத்தின்கீழ் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அனைவரும் அதிகபட்சமாக 2 வாரங்களுக்குள் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

எனினும், ஹொங்கொங் வாசிகள் அனைவருமே இந்தத் திட்டத்தின்கீழ் கொவிட் – 19 பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.

இதுதொடர்பாக ஹொங்கொங் தலைமை நிர்வாக அதிகாரி கேரி லாம் கூறுகையில் –

சீனாவின் உதவியுடன் மட்டுமே இந்தத் திட்டத்தை செயற்படுத்த முடியும். இந்த திட்டத்துக்குத் தேவையான ஆய்வகப் பணியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு வசதிகளை சீனா வழங்கவிருக்கிறது எனக் கூறினார்.

எனினும், சீன உதவியுடன் இந்த பரிசோதனைத் திட்டம் செயற்படுத்தப்படுவதால், தனிநபர்களின் இரகசிய விவரங்கள் சீன அரசால் திருடப்படுவதற்கான வாய்ப்புள்ளதாக சிலர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

ஹொங்கொங்கில், இதுவரை 12 லட்சம் பேருக்கு கொவிட் – 19 பரிசோதனை செய்யப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஹொங்கொங்கில் இதுவரை 4,632பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 75பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 3,900 பேர் பூரண குணமடைந்துள்ளனர்.

# நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்திய 19 ஆவது திருத்தச் சட்டம்!

கொழும்பு, ஓக.22

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் கடந்த அரசாங்கம் நாட்டை குழப்பத்தில் ஆழ்த்திய நிலையில் அரசியல் பொறிமுறையில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை சபைத் தலைவர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றைக் கலைக்க ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை நீக்குதல், நாடாளுமன்றின் பதவிக் காலம் நான்கரை ஆண்டுகள் முடியும்வரை கலைக்க முடியாது என்ற ஒரு பிரிவு உள்ளடக்கப்பட்டுள்ளது மாட்டுமல்லாது மர்மமான சுயாதீன ஆணைக்குழுக்களும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தின என அவர் குற்றம்சாட்டினார்.

19 ஆவது திருத்தத்தின் உட்பிரிவின் காரணமாக மார்ச் மாதம் வரை நாடாளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதியால் முடியவில்லை, இது நாடாளுமன்றம் அதன் பதவிக் காலத்தின் நான்கரை ஆண்டுகள் இயங்கும் வரை கலைக்க முடியாது என்பதனாலேயே என தினேஷ் குணவர்த்தன கூறினார்.

மேலும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தில் உள்ள அதிகாரங்கள் நாட்டை சீர்குலைப்பதற்காக கடந்த அரசாங்கத்தால் அகற்றப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தனது கொள்கை அறிக்கையில் ஒரு புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்தி நாடாளுமன்றத்தை பலப்படுத்துவதாக உறுதியளித்தார் என்றும்



அவர் சுட்டிக்காட்டினார்.

2015 ஆம் ஆண்டில் 'நல்லாட்சி அரசாங்கத்திடம்' நாடு ஒப்படைக்கப்பட்டபோது, பொருளாதார வளர்ச்சி விகிதம் 6.7 சதவீதமாகவும், 2020 இல் நாடு திரும்ப ஒப்படைக்கப்பட்டபோது, பொருளாதார வளர்ச்சி விகிதம் வெறும் இரண்டு சதவீதமாகவும் இருந்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுருட்டுகளை தயாரித்தோர் 10 பேர் கைது



சட்டவிரோதமான முறையில் சுருட்டுகளைத் தயாரித்துத் தோட்டப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு விற்பனை செய்த பத்துபேரை, நேற்று முன்னர் மாலை கைது செய்துள்ளதோடு, அவர்களிடமிருந்து 32,684 சுருட்டுகளையும் தாங்கள் மீட்டுள்ளனர் என ஹட்டன் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹட்டன் மதுவரித் திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது குறித்த சந்தேக நபர்களிடமிருந்து அனுமதியின்றி சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட 32,684 சுருட்டுகள் மீட்கப்பட்டுள்ளன. ஒரு சுருட்டு பத்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதாகவும், விற்பனை செய்யப்பட்ட சுருட்டுகளில் லேபல் எதுவும் ஒட்டப்பட்டிருக்கவில்லை எனவும் மது வரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஆளும் கட்சிக்கு பிரதி, உதவி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்!



நாடாளுமன்றத்தின் ஆளுங்கட்சியின் பிரதி அமைப்பாளர் மற்றும் உதவி அமைப்பாளர் ஆகியோருக்கான நியமனக்கடிதங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இதன்படி ஆளுங்கட்சியின் பிரதி அமைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா மற்றும் ஜயந்த கெடகொட ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உதவி அமைப்பாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜகத் புஷ்பகுமார, மொஹமட் முஸ்ஸமில் அசங்க நவரட்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஆளுங்கட்சியின் பிரதி அமைப்பாளர் மற்றும் உதவி அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால்; வழங்கி வைக்கப்பட்டுள்ளன எனப் பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் குறித்த நியமனங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைப் பிரதமர் மஹிந்தவுக்கு வாழ்த்து தெரிவித்தார் ஆஸ்திரேலிய பிரதமர் மொரிசன்!

கொழும்பு, ஓக.22

பொதுத்தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றிக்கு ஆஸ்ரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு தொலைபேசி மூலம் அழைத்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது இரு நாட்டுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் இலங்கை மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையேயான உறவுகளை மேலும் அதிகரிப்பது தொடர்பாகவும் இரு தலைவர்களும் விருப்பத்தை வெளிப்படுத்தினர்.

மேலும் இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் புதிய அரசாங்கத்துடன் நெருக்கமாகப் பணியாற்ற தான் எதிர்பார்ப்பதாக பிரதமர் ஸ்கொட் மொரிசன் கூறினார்.

இதேவேளை கொரோனா தொற்று நிலைமை முற்றிலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பின்னர் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்



கொள்ள வேண்டும் என பிரதமர் மொரிசனுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பிற்கு பிரதமர் ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்த பிரதமர் மொரிசன், இலங்கைக்கு தான் முன்னர் மேற்கொண்ட பயணத்தை நினைவு கூர்ந்தமையுடன் 'இலங்கை ஓர் அழகான நாடு' என்றும் விரைவில் மீண்டும் வருகை தருவேன் என்றும் உறுதியளித்துள்ளார்.

# வனப் பாதுகாப்பு அதிகாரி ஹெரோயினுடன் கைது

ஹெரோயின் போதைப்பொருளை தன்வசம் வைத்திருந்த வனப்பாதுகாப்பு அதிகாரியொருவர் கந்தர, தெவிநுவர பிரதேசத்தில் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தர பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, திக்வெல்ல பிரதேசத்தை சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் முன்னெடுத்த விசாரணைகளின் போது அவர் ஹம்பாந்தோட்டை வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் அலுவலகத்தில் பணியாற்றுபவர் எனவும், அவரிடமிருந்து 2 கிராம் 100 மில்லிகிராம் நிறைவுடைய ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரச வேலைவாய்ப்புக்கு உள்வாங்கப்படாத பட்டதாரிகள் செப்.15 இற்கு முன் பிரதேச செயலகத்தில் முறையிடலாம்!

அரச வேலைவாய்ப்பு திட்டத்திற்கு தெரிவு செய்யப்படாத பட்டதாரிகள் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர்களிடம் முறையிடலாம் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ÅÅÅ.p«½Bª. Ãw¨.¦\ என்ற இணையதளத்தில் மேன்முறையீடு செய்வதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தொழில்பெறும் பட்டதாரிகள் எதிர்வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி அருகிலுள்ள பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட ஒரு லட்சம் பேரை தொழில்களில் அமர்த்தும் பணிகள், அதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள செயலணியின் மூலம் எதிர்வரும் செப்ரெம்பர் 02 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டை மிதக்கும் வர்த்தக தொகுதியை உடனடியாகப் புனரமைக்க நடவடிக்கை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய கோட்டை மிதக்கும் வர்த்தக தொகுதியை உடனடியாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேராவின் தலைமையில் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த நான்கரை வருடங்களாக கோட்டை மிதக்கும் சந்தை தொகுதி உரிய முறையில் பராமரிக்கப்படாமையினால் அங்குள்ள நூற்றுக்கு 80 வீதமான கடைகளை மூட நேரிட்டதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மிதக்கும் சந்தை உள்ள ஏரியின் நீர் சுத்தமாக இல்லாமையினால் கடந்த நாள்களாக சுற்று சூழலுக்குக் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில், அதனை உடனடியாக திருத்தியமைக்க உத்தரவிட்டுள்ளார்.

# சுயாதீன ஆணைக்குழுக்களை இரத்து செய்ய வேண்டாம்

## விஜித ஹேரத் வலியுறுத்து



அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் குறைபாடுகள் இருக்கும் அதே வேளை, அதன்மூலம் அறிமுகப்படுத்திய சுயாதீன ஆணைக்குழுக்களை இரத்து செய்ய வேண்டாம் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று வலியுறுத்தினார்.

19 ஆவது திருத்தம், ஜனநாயகம் மற்றும் நீதியை உறுதி செய்வதில் தேர்தல்கள் ஆணைக்குழு போன்ற சுதந்திரமாகச் செயற்படும் ஆணைக்குழுக்களுக்கு முக்கிய பங்கு உள்ளது என்றும் அவர் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

'19 ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் சுதந்திரமான, நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முக்கியமானவை 19 ஆவது திருத்தத்தின் முற்போக்கான அம்சங்கள் ஒழிக்கப்படக்கூடாது' எனவும் அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டு 19 ஆவது திருத்தத்தின் கீழ் நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும், நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை பலவீனப்படுத்துவதற்கும், அனைத்து அதிகாரங்களையும் ஒரு தனி நபருக்கு வழங்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தேசிய மக்கள் சக்தி எதிர்ப்பு தெரிவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சந்நிதியான் ஆலயச் சூழலில் தொற்று நீக்க நடவடிக்கை!



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில், கொரோனா தொற்று அச்சம் காரணமாக ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளியைப் பேணி ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அடியவர்கள் ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ளும் நிலையில் ஆலயப் பகுதியில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக வல்வெட்டித்துறை நகரசபையின் சுகாதார பிரிவினரால் ஆலய பகுதியில் கிருமித் தொற்று நீக்கச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

மேற்படி கிருமித் தொற்று நீக்கச் செயற்பாடானது இரவு வேளைகளில் ஆலயத்தின் உட்புறம் மற்றும் வெளிவீதிகளில் முன்னெடுக்கப்படுகின்றது.

# கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் இலங்கையில் மேலும் அதிகரிப்பு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 941 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று (வெள்ளிக்கிழமை) மாத்திரம் 23 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு திரும்பிய 18 பேருக்கும், சென்னையில் இருந்து நாடு திரும்பிய 2 பேருக்கும், துருக்கியில் இருந்து நாடு திரும்பிய ஒருவருக்கும், இந்தோனேசியாவில் இருந்து நாடு திரும்பிய ஒருவருக்கும், குவைத்திலிருந்து நாடு திரும்பிய ஒருவருக்கும் இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து நேற்று, 24 பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதன்படி, இதுவரை இரண்டாயிரத்து 789 பேர் தொற்றிலிருந்து பூரண குணமடைந்துள்ளனர்.

மேலும் வைரஸ் தொற்று உறுதியான 141 பேர் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 11பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முச்சக்கரவண்டிகளின் பதிவில் வீழ்ச்சியாம்!

இலங்கையில் நாளாந்தம் 600 முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் தங்கள் முச்சக்கர வண்டிகளை விற்பனை செய்கின்றனர் என மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் 2,19,506 உரிமையாளர்கள் தங்கள் முச்சக்கர வண்டிகளை விற்பனை செய்துள்ளனர் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் புதிதாக முச்சக்கர வண்டி பதிவில் வீழ்ச்சி நிலை காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

கடந்த வருடத்தில் புதிதாக 14,378 முச்சக்கர வண்டிகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய நாள் ஒன்றுக்கு புதிதாக 40 முச்சக்கர வண்டிகள் வீதிகளில் இறங்குகின்றன எனவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# விமானங்கள் மூலம் தேடுதல் நடத்தி கஞ்சாத் தோட்டங்கள் கண்டுபிடிப்பு!

இலங்கையில் முதன் முறையாக, சட்டவிரோத கஞ்சா தோட்டங்களை அழிக்கவும், சந்தேக நபர்களை கைது செய்யவும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் குழு விமானம் மூலம் வான் வழி மற்றும் தரை நடவடிக்கைகளை மேற்கொண்டது.

வீரவிலால் விமானப் படை தளத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விமானப்படையுடன் இணைந்து பொலிஸ் விசேட அதிரடிப்படையின் (எஸ்.டி.எவ்) சிறப்பு ஆயுதங்கள் மற்றும் தந்திரோபாய அணியால் இந்த நடவடிக்கை தொடங்கப்பட்டது.

மூன்று விமானங்களைப் பயன்படுத்தி விசேட அதிரடிப்படைப் பணியாளர்களின் 08 குழுக்கள் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது, 04 ஏக்கர் பரப்பளவில் 08 கஞ்சா வளரும் பகுதிகளில், 04 அடி உயரம் வரை வளரும் 159,630 கஞ்சா மரங்களுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகள் ஹம்பேகமுவா, குடா ஓயா மற்றும் தனமால்வில பொலிஸ் பகுதிகளை உள்ளடக்கியது.

# பொலிஸார் தன்னைத் தாக்கினர் என ஓட்டோ சாரதி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு!

சிவில் உடையில் வந்த பொலிஸ் அதிகாரியுடன் முரண்பட்டார் எனக் குற்றம் சுமத்தி, ஓட்டோ சாரதி மீது யாழ்ப்பாண பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றையதினம் (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வெளிமாவட்டத்திலிருந்து பஸ்ஸில் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் வந்திறங்கிய நபர் ஒருவரிடம், அப்பகுதியில் ஓட்டோ சேவையில் ஈடுபடும் நபர் ஒருவர் ஓட்டோவில் செல்வோமா எனக் கேட்டுள்ளார்.

அந்நபர் வேண்டாம் என கூறி அங்கிருந்து சென்றதும், ஓட்டோ சாரதியும் அடுத்த வாடிக்கையாளரை பிடிக்கும் நோக்குடன் பிறிதொரு நபரை அணுகி கேட்டுள்ளார்.

அந்நிலையில் வேண்டாம் என கூறி சென்ற நபர் சிறிது தூரம் சென்ற நிலையில் மீண்டும் திரும்பி வந்து ஓட்டோ சாரதியுடன் முரண்பட்டுள்ளார்.

அதனால் இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்புக்கு செல்ல முயன்ற வேளை அருகிலிருந்த மற்றுமொரு ஓட்டோ சாரதி இருவரையும் சமாதானப்படுத்த முனைந்துள்ளார். சிவில் உடையில் வந்த நபர் சமாதானப்படுத்த முனைந்த நபருடனும் முரண்பட்டுள்ளார்.

அதனால் இரு சாரதிகளும் அவ்விடத்தில் இருந்து விலகி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யச் சென்றுள்ளனர். அங்கு நடமாடும் சேவையில் இருந்த பொலிஸாரிடம் சம்பவம் தொடர்பில் வாய்மொழி மூலம் முறையிட்டுள்ளனர்.

அதனை அடுத்து பொலிஸார் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு இருவரையும் அழைத்து வந்த போது அங்கு இவர்களுடன் முரண்பட்ட சிவில் உடை தரித்த நபர் நின்றிருந்தார்.

அவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது, தான் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி எனத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு, ஓட்டோ சாரதி தன்னைத் தாக்கினார் என முறையிட்டார்.

அதனை அடுத்து அந் நபருடன் முரண்பட்ட ஓட்டோ சாரதியைப் பொலிஸார் கைதுசெய்து தமது வாகனத்தில் ஏற்றிப் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றுள்ளனர்.

அதன் போது சிவில் உடையில் வந்திருந்த பொலிஸ் அதிகாரியும் அந்த வாகனத்தில் ஏறி பொலிஸ் நிலையம் சென்றுள்ளார். அதன் போது தன்னுடன் முரண்பட்ட சாரதியை வாகனத்தினுள் வைத்து மூர்க்கத்தனமாக அவர் தாக்கியுள்ளார்.

பின்னர் பொலிஸார் சாரதியை பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் தடுத்து வைத்திருந்த போதிலும் அங்கு வைத்தும் சிவில் உடை தரித்த பொலிஸ் அதிகாரி கடுமையாகத் தாக்கியுள்ளார். அதனால் சாரதி காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த சாரதியை பொலிஸார் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளனர்.

வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் சாரதி, தன்னை பொலிஸார் சித்திரவதை புரிந்து தாக்குதல் மேற்கொண்டனர் என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலக இணைப்பாளர் த.கனகராஜிடம் முறையிட்டுள்ளார்.

# ஒழுங்குப் பத்திரத்தில் பதியப்பட்டது இடைக்காலக் கணக்கு அறிக்கை!



இந்த வருடத்தின் இறுதி 04 மாதங்களுக்கான இடைக்கால கணக்கறிக்கை ஒன்றை நாடாளுமன்றத்தில் முன்வைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி அடுத்த நான்கு மாத செலவீனங்களை ஈடுகட்டும் 95 ஆயிரம் கோடி ரூபா மதிப்பீடு நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் குறித்த மதிப்பீட்டை நிதியமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்பிக்கப்படவுள்ளது. எனவே எதிர்வரும் மாதங்களுக்கான அரச செலவீனத்தை கருத்தில் கொண்டு இந்த இடைக்கால கணக்கறிக்கை முன்வைக்கப்படவுள்ளது.

அடுத்த நான்கு மாத செலவீனங்களை ஈடுகட்ட 95 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். குடாநாடு ஒரு கட்சிக்கு வழங்கிய சீதனமா?

## கேட்கிறார் சுமந்திரன்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஓக.22

**நாடு ஒரு புறம் இராணுவமயப்படும் நிலையில் மறுபுறத்தே யாழ். குடாநாடு ஓர் அரசியல் கட்சிக்கு வழங்கிய சீதனம் போன்ற நடவடிக்கைகளே இடம்பெறுகின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டு செல்வது நாட்டின் முழு நிர்வாகத்தையும் படையினரிடம் தாரை வார்ப்பதற்கு ஒப்பானது. எனவே இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதனை ஏற்கனவே சுட்டிக்காட்டினோம்.

நாடு இராணுவ மயப்படுத்தப்படுகின்றது என தேர்தல் காலத்தில் நாம் கூறியபோது அரசும் அரசுடன் சேர்ந்துள்ள கட்சிகளும் அதனை மறுத்தனர். ஆனால் இன்று நாட்டின் சிவில் நிர்வாகத்தை மேற்கொள்ளும் அமைச்சான உள்நாட்டு அலுவல்கள் விடயம் முழுமையாகப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் சிவில் நிர்வாகங்களுடனேயே சர்வதேச நாடுகளும் தொடர்பைப் பேண விரும்பும். அந்த நிலைமையையும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்களுக்குக்கூட மக்கள் சென்று தமது நிலைமையை தெரிவிக்க அஞ்சும் நிலைமையையே புதிய அரசு தோற்றுவிக்கின்றது. இதை சர்வதேச நாடுகளும் அறிந்துகொள்ள வேண்டும். என நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்ற கையோடு தெரிவித்தோம்.

தற்போது இதற்கும் அப்பால் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற அரச ஆதரவுக் கட்சிகளும் இதற்குப் பதில் கூறியே ஆக வேண்டிய கடப்பாட்டில் உள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முழுமையாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாடகைக்கு வழங்கப்



படுகின்றது.

இணைத்தலைவரில் ஒருவர் மாவட்ட செயலகத்தில் 3 இடங்களைக் கோருகின்றார். அத்தோடு எந்த அமைச்சின் ஊடாக எந்தத் திட்டம் வந்தாலும் தனது அனுமதி இன்றி நடைமுறைப்படுத்தக்கூடாது என்ற உத்தரவைப் பிறப்பித்துள்ளமையோடு செயலகத்துக்கு வெளியே உள்ள எந்தத் திணைக்களங்கள், காரியாலயங்களுடனும் தனது ஒப்புதல் இன்றி தொடர்பு கொள்ளக் கூடாது எனவும் அதிகாரிகளை எச்சரிக்கும் வகையில் உத்தரவிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் தலைவருக்கு இந்த அதிகாரம் உண்டா , இவற்றை யார் வழங்கியவர்கள்?, இவற்றினை இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் அறிவார்களா? யாழ்ப்பாணத்தை முழுமையாக சுதந்திரக் கட்சிக்கு வாடகை ஒப்பந்தம் எழுதி வழங்கப்பட்டதா எனவும் வினாக்களை தொடுக்க விரும்புகின்றேன். - என்றார்.

# மலேசியாவிலிருந்து 291 பேர் திரும்பினர்

கொரோனா வைரஸ் நிலைமைகளால் மலேசியா மற்றும் சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு வரமுடியாமல் தவித்து வந்த மேலும் 291 பேர் இன்று காலை நாட்டுக்கு வந்தடைந்தனர்.

மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் இருந்து இவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள்.

நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ள 291 பேருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தனிமைப்படுத்தும் மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# கொரோனா வைரஸ் தொற்று 2 ஆண்டுகளுக்குள் முடிவுக்கு!

## உலக சுகாதார அமைப்பு நம்பிக்கை

இரு ஆண்டுகளுக்குள் கொரோனாவைரஸ்தொற்று முடிவுக்கு வரும் என உலக சுகாதார அமைப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

சீனாவில் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 213 நாடுகள் பிரதேசங்களுக்கு பரவிப் பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்த வைரஸுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியின் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளபோதும் கொரோனாவின் தாக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இந்நிலையில், இரு ஆண்டுகளுக்குள் கொரோனா வைரஸ் முடிவுக்கு வரும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் ஆதனாம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறியவை வருமாறு: -

உலகமயமாதல், நெருக்கம், தொடர்பில் இருத்தல் போன்றவை நமக்கு குறைபாடுகளாக உள்ளன. ஆனால் நம்மிடம் தொழில்நுட்ப வளர்ச்சியில் நன்மை உள்ளது.

ஆகையால், இந்த கொரோனா தொற்றை நாம் 2 ஆண்டுகளுக்குள் முடிவுக்குக் கொண்டுவந்து விடலாம். தற்போது இருக்கும் யுக்திகளை அதிகபட்சமாக பயன்படுத்த வேண்டும்.

கூடுதலாக கொரோனாவுக்கு தடுப்பூசி கிடைக்கும் பட்சத்தில் நாம் இந்த வைரஸ 1918 ஆம் ஆண்டு உருவான ஸ்பானிஷ் புளூ முடிவடைந்த காலகட்டத்திற்கு முன்னரே முடிவுக்கு கொண்டு வந்து விடலாம். - என்றார்.

1918 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட ஸ்பானிஷ் புளூ என்ற வைரஸ் உலகையே உலுக்கி எடுத்தது. இந்த ஸ்பானிஷ் புளூவுக்கு உலகம் முழுவதும் 5 கோடி முதல் கோடி பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

இந்த வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டு 2 ஆண்டுகள் நீடித்தது. அதன் பின்னர் தான் இந்த கொடிய வைரஸ் காய்ச்சல் பாதிப்பில் இருந்து மெல்ல உலகம் பழைய நிலைக்கு திரும்பியது என்பது குறிப்பிடத்தக்கது:

# இரண்டு பௌத்த பல்கலைக்கழகங்களை கல்வி அமைச்சின்கீழ் கொண்டுவர முடிவு!

## மகாநாயக்கர்களின் கோரிக்கைக்கு கோட்டா இணக்கம்

மகாசங்கத்தினரின் வேண்டுகோளின்பேரில் இலங்கை பௌத்த, பாலி பல்கலைக்கழகத்தையும், புத்த ஷிராவக பிக்கு பல்கலைக்கழகத்தையும் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இரண்டு பல்கலைக்கழகங்களையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

இப்பல்கலைக்கழகங்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சரின் கீழ் முறையாக மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஜனாதிபதி பௌத்த ஆலோசனைக் குழுவின் ஐந்தாவது கூட்டத்தொடரின்போது ஜனாதிபதியால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி ஆலோசனை சபையின் 4 ஆவது கூட்டத்தொடரில் மகாசங்கத்தினர் முன்வைத்த முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்ற நிலைமைகளை அடுத்த கூட்டத்தில்



சமர்ப்பிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சு கட்டமைப்பை ஏற்படுத்தும் போது பௌத்த ஆலோசனை சபையின் வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரச கொள்கை வகுப்பின்போது தொடர்ந்தும் மகாசங்கத்தினரின் வழிகாட்டலைத் தான் எதிர்பார்க்கிறார் எனவும் தெரிவித்தார்.

அறநெறிப் பாடசாலைகள், பிக்குகளின் கல்வி, பிரிவெனாக்கள் மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்களின் முன்னேற்றத்திற்காக இராஜாங்க அமைச்சு ஒன்றை நேரடிக் கண்காணிப்புக்காக நியமித்திருக்கிறார் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் தற்போதைய பிரிவெனா கல்வி முறையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அறநெறிப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை முறையான நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக சிறந்த நிலைக்கு மாற்றுவதற்கும் ஜனாதிபதி மேற்கொண்டு வரும் முயற்சிகளை மகாசங்கத்தினர் பாராட்டினர்.

இம்முறை நாடாளுமன்றத்திற்கு எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்ட பதவிகளுக்கு தெரிவுகளை மேற்கொள்ளும் போது பின்பற்றப்பட்ட நடைமுறை நாட்டுக்கு முன்னுதாரணமானதாகும் என மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர் சங்கைக்குரிய நியங்கொட விஜத்த சிறி தேரர் குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்க காலத்தில் இப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட முறை குறித்து மக்கள் வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர் என்றும் தேரர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சரவையை மட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பொது மக்களின் பணத்தை மீதப்படுத்துவதற்கு உதவும் என அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் சங்கைக்குரிய ஆனமடுவே தம்மதஸ்ஸி தேரர் தெரித்தார்.

அரசாங்க தொழில்வாய்ப்புக்களை வழங்கும்போது அறநெறிப் பாடசாலைகளின் இறுதி ஆண்டு மற்றும் தர்மாச்சாரிய சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கும் முறைமையொன்றின் அவசியத்தை சங்கைக்குரிய திவியகஹ யஸஸி தேரர் சுட்டிக்காட்டினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.08.2020 இல் வெளியிடப்பெற்றது.